# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.2 |
| பெயர் | சௌந்திரராஜன் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 16th day of October 2024.

**(1** வது அக்ரம் ஜிந்தா**, 2** வதுஎதிரி சதாம் உசேன் என்கிற சதாம்**, 4** வது எதிரி அனு என்கிற அன்சாத்**, 5** ஆம் எதிரி ஜாபர் அலி என்கிற ஜாபர், **6** ஆம் எதிரி அப்துல் முனாப் என்கிற முனப் எதிரிகள் ஆஜர்**. 3** ஆம் எதிரி சம்சுதீன் என்கிற சம்சு என்கிற கூளை சம்சு எதிரி ஆஜரில்லை**. BNSS 355** ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது**)**

முதல் விசாரணை

நான் சிறப்பு நுண்ணறிவு பிரிவில் வேலை செய்து கடந்த 2020 ல் ஓய்வு பெற்று விட்டேன். இந்த வழக்கு சம்பவ காலத்தில் நான் கோவை பி.1 கடைவீதி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 17-03-2017 ஆம் தேதி அதிகாலை 12.30 மணிக்குமேல் நான் பி.1 காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஒரு ஆட்டோவில் இரண்டு பெண்கள் மற்றும் ஒரு ஆண் காவல் நிலையத்திற்கு வந்தார்கள். அவர்கள் மூவரும் பதற்றமான சூழ்நிலையில் கவலை தோய்ந்த முகத்துடன் வந்தார்கள். அதில் ரசீதா என்பவர் தனது கணவர் கழுத்தில் வெட்டுப்பட்டு இறந்து கிடப்பதாகக் கூறினார். அவர் பதட்டமாக இருந்ததால் அவர் புகாரைக் கூற, கூற அவருடன் வந்த அபுதாகீர்

அந்த புகாரை கைப்பட எழுதினார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.1 ஆவணம்தான் அந்த புகார் ஆகும். அந்த புகாரில் புகார் செய்த ரசீதாவும், அதை எழுதிய அபுதாகீரும் கையொப்பம் செய்தார்கள். புகாரைப் பெற்ற நான் புகாரின் தன்மைக்கேற்ப கு.எண்.258/2017 சட்டப்பிரிவுகள் 302 இ.த.ச.வின்கீழ் வழக்கைப் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை எக்ஸ்பிரஸ் எப்.ஐ.ஆராக அதிகாலை 1.30 மணி அளவில் சிறப்பு காவலர் ஒருவரிடம் சம்மந்தப்பட்ட நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகலை புகாரைக் கொடுத்த ரசீதாவிடம் கொடுத்தேன். மற்ற நகல்களை என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கைதான் அன்றைய தினம் நான் பதிவு செய்ததாகும். அது அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையில் ரசீதா கையொப்பம் செய்துள்ளார். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை 18-03-2017 அன்று விசாரித்து வாக்குமூலம் பெற்றார். பின்னிட்டு 12-05-2017ல் சி.பி.சி.ஐ.டி பிரிவில் காவல் துறை கண்காணிப்பாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்.

**<u>1,3, மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

17-03-2017 அன்று அதிகாலை 12.30 மணி அளவில் புகார்தாரர் வந்தார். அன்றைய தினம் 16-03-2017 அன்று எனது உயர் அதிகாரியாக யார் இருந்தார் என்று எனக்கு தற்போது நினைவில்லை. புகாரைப் பெற்று வழக்கைப் பதிவு செய்து, அதன் விவரத்தை உடனடியாக நிலைய ஆய்வாளருக்கும், மேற்கு பகுதி உதவி ஆணையர் அவர்களுக்கும் தகவல் தெரிவித்தேன். ஆய்வாளர் 18-03-2017 அன்று என்னை விசாரித்தபொழுது முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரை

துரித தபாலாக சிறப்பு காவலர் மூலம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்த விவரத்தை நான் கூறினேனா என்றால், நான் கூறினேன். சம்பவத்தன்று இரவு ரோந்து பணி இருந்தது. பொதுவாக ரோந்து பணியில் இருக்கும் காவலர்கள் அவர்களது பாக்கெட் டைரியில் ரோந்து சென்ற விவரங்களை குறித்து வைப்பது வழக்கம். அந்த விவரங்கள் நிலைய ஜி.டி பைலிலும் குறிக்கப்படும் என்று சொன்னால், சரிதான். 17-03-2017 அன்று காலை 8 மணிக்கு எனது அலுவல் நேரம் முடிந்தது. இந்த வழக்கு சம்பவ காலத்தில் எங்கள் காவல் நிலையத்தில் வீரண்ணன் என்ற சிறப்பு உதவி ஆய்வாளர் இருந்தாரா என்று தற்போது எனக்கு நினைவில்லை. நான் வழக்கிற்காக நினைவில்லை என்று தவறாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 16-03-2017 அன்று இரவு வீரண்ணன் ரோந்து பணிக்குச் சென்று இறந்து கிடந்த பரூக்கைப் பார்த்த அந்த தகவலை உடனடியாக 11.55 மணிக்கு காவல் நிலையத்திற்கு தெரிவித்தார் என்று சொன்னால், சரியல்ல. 16-03-2017 அன்று வீரண்ணன் கொடுத்த தகவல் இந்த வழக்கிற்கு எதிராக உள்ளதால் அதை நிலைய பொது நாட்குறிப்பேடில் குறிப்பிடாமல் அந்த விவரத்தை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது உயர் அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக மேற்சொன்ன தகவலை நான் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கையின் நகலையும், புகாரின் நகலையும் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்று தற்போது எனக்கு நினைவில்லை. 16-03-2017 இரவு முதல் 17-03-2017 அதிகாலை காலை 6 மணிவரை ஆய்வாளர் காவல் நிலையத்தில் இல்லை என்று சொன்னால், சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த 15 நிமிடத்தில் நான் ஆய்வாளருக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்தேன். முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்வதற்கு முன்னர் ஆய்வாளரிடமும், உதவி ஆணையரிடமும், ஆலோசனைப் பெற்று அதன்பிறகுதான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். பொதுவாக காவல் நிலையத்தில் எழுத்தர் ஒருவர் இருப்பார். அன்றைய தினம் இரவு யார் எழுத்தர் என்று தற்போது எனக்கு நினைவில்லை. ஆனால் இரவு நிலைய எழுத்தர் இருந்தார். புகாரை நிலைய எழுத்தர் எழுதாததற்கு சிறப்பு காரணம் ஏதாவது உள்ளதா என்றால், புகார்தாரருடன் வந்த நபர் அவருக்கு உறவினர் என்பதால் புகாரை அவர் எழுதினார். நான் வழக்கைப் பதிவு செய்வதற்கு முன்னர் ரசீதாவிடம் அனைத்து விவரங்களையும் விசாரித்து தெரிந்து கொண்டேன். புகாரின் அடிப்படையில் யாரோ தன் கணவரை கொலை செய்து விட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால், சரிதான். 17-03-2017 அன்று காலை 8 மணிக்கு பணிமுடித்து மீண்டும் மதியம் 2 மணிக்கு பணிக்கு திரும்பி விட்டேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை மட்டும்தான் நான் பதிவு செய்தேன். 17-03-2017 அன்று எத்தனை மணிக்கு ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வந்தார் என்று எனக்கு நினைவில்லை. ஆனால் விசாரணைக்காக வெளியில் இருந்தார். 17-03-2017 அன்று ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. காரணம் அவர் வழக்கை விசாரிப்பதற்காக வெளியில் இருந்தார். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் நான் அன்றைய தினம் இரவு பணியில் இல்லை என்று சொன்னால், சரியல்ல. எங்களது உயர் அதிகாரிகள் கலந்து ஆலோசித்து தயார் செய்த முதல் தகவல் அறிக்கையில் நான் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன் என்று சொன்னால், சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் அ.சா.1 உறவினர்களுடன் காவல் நிலையத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் அபுதாகீர் காவல் நிலையத்தில் வைத்து புகார் எதுவும்

எழுதவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் கூறிய நேரத்தில் வழக்கைப் பதிவு செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் ஆய்வாளருடம், சி.பி.சி.ஐ.டி உதவி ஆணையரும் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னை 18-03-2017 அன்று காவல் நிலையத்தில் வைத்து ஆய்வாளர் விசாரித்தார். ஆனால் எத்தனை மணிக்கு விசாரித்தார் என்று நினைவில்லை. எனது முன்னிலையில் புகார்தாரரையோ, அவருடன் வந்த இருவரையுமோ ஆய்வாளர் விசாரிக்கவில்லை. புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றும்,அந்த இரு ஆவணங்களும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. ரோந்து பணிக்கு செல்லும் போலீசார் ஏதேனும் குற்றம் நிகழ்ந்து அதை நிலையத்திற்கு தெரிவித்தால் அதன் அடிப்படையில் பொதுவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும்.

**2** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொன்ன நேரத்தில்**,** சொன்ன விதத்தில் புகார் பெறப்படவில்லை என்றும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல**.**

**5** வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் தகவல் அறிக்கை விரைவு தபாலாகவும்**,** சாதாரண தபாலாகவும் அனுப்பி வைப்போம்**.** 17-03-2017 அன்று காவல் நிலையத்தில் சி**.**சி**.**டி கேமிரா இருந்தது**.** ஆனால் அது வேலை செய்ததா**,** இல்லையா என்று எனக்கு தற்போது

நினைவில்லை. நிலைய சி.சி.டி கேமிராவை கைப்பற்றியிருந்தால் ஆட்டோவில் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்ற விவரம் தெரிந்து விடும் என்பதால் அதை வேண்டுமென்றே இந்த வழக்கில் கைப்பற்றவில்லை என்று சொன்னால், சரியல்ல. புகாரில் புகாரை எழுதிய அபிதாகீரின் பெயர் முழுமையாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால், சரிதான். ஆனால் கையொப்பம் செய்துள்ளார். நான் ரசீதாவிடம் பேசும்பொழுது அவர் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டு காவல் நிலையத்திற்கு வந்தததாக கூறினார். சம்பவ இடத்தில் தெரு விளக்கு எரிந்ததா, இல்லையா என்று நான் கேட்டுத் தெரிந்து கொண்டேனா என்றால், நான் அவரை விசாரிக்கவில்லை. ஆனால் அவர் புகார் எழுதும்போது சம்பவ இடத்தில் தெரு விளக்கு எரிந்து கொண்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். புகாரை ரசீதா கூறக்கூறு நான் எழுதினேன் என்று அபுதாகீர் எங்கும் குறிப்பிடவில்லை என்று சொன்னால், அவர்கள் பதற்றத்தில் இருந்ததால் அவ்வாறு கூறாமல் இருந்து இருக்கலாம். பொதுவாக காவல் நிலையத்தில் பொது நாட்குறிப்பு இருக்கும் என்று சொன்னால் சரிதான். நான் அன்றைய தினம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன் என்று காட்டுவதற்கு ஆதாரமாக பொது நாட்குறிப்பை ஆய்வாளர் கைப்பற்றினாரா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதை ஆய்வாளர் கண்டிப்பாக பார்ப்பார். எனக்கு இரவு பணி என்று ஆய்வாளர் வாய்மொழியாக உத்திரவிடுவார். முதல் தகவல் அறிக்கையில் அது விரைவு தபாலாக அனுப்பப்பட்ட விவரம் காணப்படவில்லை என்று சொன்னால், சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் இரவு பணியில் நான்

இல்லை என்று சொன்னால், சரியல்ல. மறுநாள் என்னை வரவழைத்து முந்தைய தேதியிட்டு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

ஒம்/சௌந்திரராஜன்,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.